Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 சென்னை | தினசரி | 4 பக்கம் வெள்ளிக்கிழமை, செப்டம்பர் 17, 2021 4 பக்கங்கள் ரூ.2/- இதழ் 65

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் கே.சி.வீரமணியின் வீடு மற்றும் அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை! லஞ்ச ஒழிப்பு போலீசாரின் இந்த தொடர் நடவடிக்கை

# அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் மத்தியில் கலக்கம்



சென்னை, செப்டம்பர் 17 2021: கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் வருமானத்துக்கு அதிகமாக அமைச்சர்கள் சொத்துக்களை குவித்ததாக குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இது தொடர்பாக லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்குப்பதிவு செய்து முன்னாள் அமைச்சர்களின் வீடுகளில் சோதனை நடத்தி வருகிறார்கள்.

கடந்த ஜூலை மாதம் முன்னாள் போக்குவரத்து துறை அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் வீட்டிலும், கடந்த மாதம் (ஆகஸ்டு) முன்னாள் உள்ளாட்சித்துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி வீட்டிலும் சோதனை நடத்தப்பட்டு பல்வேறு ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன.

இந்த நிலையில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் கே.சி.வீரமணியின் வீடு மற்றும் அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை.

கே.சி.வீரமணி கடந்த 10 ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சராகவும், பத்திரப்பதிவு மற்றும் வணிக வரித்துறை அமைச்சராகவும் பொறுப்பு வகித்து உள்ளார்.

இந்த காலக்கட்டங்களில் கே.சி.வீரமணி வருமானத்துக்கு அதிகமாக சொத்துக்களை வாங்கி குவித்து உள்ளதாக புகார் எழுந்துள்ளது.

இதன் அடிப்படையில் வேலூர் லஞ்ச ஒழிப்பு போலீசார் கே.சி.வீரமணி மீது வழக்குப்பதிவு செய்தனர். ஊழல் தடுப்பு சட்டம், வருமானத்துக்கு அதிகமாக சொத்துக்களை குவித்தது, தனது அமைச்சர் பதவியை தவறாக பயன்படுத்தியது என்பது உள்ளிட்ட பல்வேறு சட்டப்பிரிவுகளில் கே.சி.வீரமணி மீது வழக்குப் போடப்பட்டது.

இதன் அடிப்படையில் தான் கே.சி.வீரமணியின் வீடு மற்றும் அவருக்கு சொந்தமான அலுவலகங்கள், நிறுவனங்களில் லஞ்ச ஒழிப்பு சோதனை நடைபெற்று வருகிறது.

கே.சி.வீரமணியின் சொந்த ஊர் திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை அருகில் உள்ள எடையாம்பட்டி ஆகும். அமைச்சராக இருந்த காலத்தில் கே.சி.வீரமணி தனது சொந்த மாவட்டமான திருப்பத்தூர் உள்ளிட்ட பல இடங்களில் தனது வருமானத்துக்கு அதிகமான சொத்துக்களை வாங்கி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கே.சி.வீரமணி பத்திரப்பதிவுத்துறை அமைச்சரான பிறகு பல்வேறு இடங்களில் முறைகேடாக சொத்துக்களை வாங்கியிருப்பது தெரியவந்துள்ளது.

ஜோலார்பேட்டை காந்தி ரோட்டில் உள்ள வீட்டில் முன்னாள் அமைச்சர் கே.சி.வீரமணி வசித்து வருகிறார். லஞ்ச ஒழிப்புத்துறை டி.எஸ்.பி. ராஜேஷ் தாஸ் தலைமையிலான குழுவினர் அதிரடி சோதனை நடத்தினர். அவர்கள் வீட்டில் இருந்த கே.சி.வீரமணியிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கே.சி.வீரமணியின் சகோதரர்கள் கே.சிஅழகிரி, கே.சி. காமராஜ் ஆகியோர் வீடுகளிலும் லஞ்ச ஒழிப்பு சோதனை நடைபெற்று வருகிறது.

ஜோலார்பேட்டை சோலையூர் பகுதியிலுள்ள அ.தி.மு.க. நகர செயலாளர் சீனிவாசன் வீட்டிலும் சோதனை நடந்தது.

தாமலேரி முத்தூரில் உள்ள ஒன்றிய செயலாளர் ரமேஷ், நாட்டறம்பள்ளி மல்லகுண்டா கிராமத்திலுள்ள ஒன்றிய செயலாளர் ராஜா, திருப்பத்தூரில் உள்ள முன்னாள் எம்.எல்.ஏ., கே.ஜி ரமேஷ், ஏலகிரி கிராமத்தில் உள்ள அ.தி.மு.க. மகளிரணி செயலாளர் சாந்தி ஆகியோர் வீடுகளிலும் சோதனை நடந்தது.

ஜோலார்பேட்டை நாட்டறம்பள்ளி ரோட்டில் உள்ள கே.எஸ். திருமண மண்டபம் வாலாட்டியூர் கிராமத்திலுள்ள கே.சி.வீரமணிக்கு சொந்தமான பீடி கம்பெனி ஆகிய இடங்களில் சோதனை நடந்தது.

திருப்பத்தூர் மற்றும் ஏலகிரி மலையில் உள்ள கே.சி.வீரமணிக்கு சொந்தமான ஓட்டல்களிலும் சோதனை நடைபெற்றது.

குடியாத்தம் கொத்தமாரி குப்பம் கிராமத்தில் கே.சி. வீரமணிக்கு சொந்தமான வேளாண் கல்லூரியில் 10-க்கும் மேற்பட்ட லஞ்ச ஒழிப்புத்துறையினர் சோதனை நடத்தினர்.

வேலூரில் முன்னாள் அ.தி.மு.க. ஒன்றிய செயலாளர் கர்ணல் என்பவருக்கு சொந்தமான சத்துவாச்சாரி, சேண்பாக்கம் ஆகிய இடங்களில் உள்ள வீடுகளில் சோதனை நடந்தது.

இதே போல அரக்கோணத்தை சேர்ந்த அதி.மு.க. இளைஞர் பாசறை மாவட்ட துணை தலைவர் ஷியாம் வீட்டில் சோதனை நடந்தது.

இன்று காலை 6 மணியில் இருந்து லஞ்ச ஒழிப்பு அதிகாரிகள் திருப்பத்தூர், சென்னை, கிருஷ்ணகிரி, ஏலகிரி, பெங்களூர், ஓசூர் உள்பட 28 இடங்களில் கே.சி.வீரமணிக்கு சொந்தமான வீடுகள், அலுவலகங்கள் மற்றும் அ.தி.மு.க.வினர் வீடுகளில் அதிரடி சோதனை நடத்தி வருகிறார்கள்.

சோதனை நடைபெறும் சாந்தோமில் உள்ள கே.சி.வீரமணி வீட்டின் அருகே பாதுகாப்புக்கு குவிக்கப்பட்டுள்ள போலீசாரை படத்தில் காணலாம்.

திருப்பத்தூரில் 15 இடங்களில், சென்னையில் சாந்தோம், கொளத்தூர், சூளைமேடு, அண்ணாநகர் உள்ளிட்ட 4 இடங்களில் இந்த சோதனை நடைபெற்று வருகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே உள்ள மூக்கண்டப்பள்ளியில் கே.சி.வீரமணிக்கு சொந்தமான 7 ஹீல்ஸ் நட்சத்திர விடுதி உள்ளது. லஞ்ச ஒழிப்பு துறை போலீசார் சோதனை நடத்தினர்.

கோவை மண்டல லஞ்ச ஒழிப்புத்துறை ஏடிஎஸ்பி திவ்யா தலைமையில் 7 பேர் கொண்ட குழுவினர் இன்று காலை 6 மணியளவில் நட்சத்திர ஓட்டலுக்கு வந்தனர். ஓட்டல் வரவேற்பு அறை, மற்றும் அலுவலக அறைகளில் சோதனை நடத்தி வருகிறார்கள். இதையொட்டி நட்சத்திர விடுதி முன்பு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. வெளியாட்கள் யாரும் ஓட்டலுக்கு செல்ல போலீசார் அனுமதிக்கவில்லை.

கே.சி.வீரமணிக்கு சொந்தமான 28 இடங்களிலும் 100-க்கும் மேற்பட்ட போலீசார் இந்த சோதனையில் ஈடுபட்டு உள்ளனர்.

கடந்த 2011-ம் ஆண்டு கே.சி.வீரமணியின் சொத்து மதிப்பு ரூ.7.48 கோடியாக இருந்தது. அது அடுத்த 10 ஆண்டுகளில் பலமடங்கு அதிகரித்துள்ளது. தற்போது அவரது சொத்து மதிப்பு ரூ.90 கோடியை தாண்டி இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டு உள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் அசையா சொத்து மற்றும் அசையும் சொத்துக்களின் மதிப்பும் அதிகரித்துள்ளது. கே.சி.வீரமணி தனது உறவினர்கள் பெயரில் சொத்துக்களை வாங்கி அதனை தனது பெயருக்கு தானமாக மாற்றி இருப்பதாகவும் புகார் கூறப்பட்டு உள்ளது. இந்த புகார்களின் அடிப்படையில் வேலூர் லஞ்ச ஒழிப்பு போலீஸ் இன்ஸ்பெக்டர் விஜய் நேற்று வழக்குப்பதிவு செய்துள்ளார். அதன் அடிப்படையில் இன்று சோதனை நடைபெற்று உள்ளது.

கடந்த 2016-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து 2021-ம் ஆண்டு மார்ச் மாதம் வரையில் கே.சி.வீரமணி முறைகேடாக சொத்துக்களை வாங்கி இருப்பதாக முதல் தகவல் அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டு உள்ளது குறிப்பிடத்தக்கது.

இன்று நடைபெற்ற சோதனையில் பல்வேறு முக்கிய ஆவணங்களை லஞ்ச ஒழிப்பு போலீசார் கைப்பற்றி இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஏற்கனவே எம்.ஆர்.விஜயபாஸ்கர், எஸ்.பி.வேலுமணி ஆகியோர் வீடுகளில் சோதனை நடத்தப்பட்டு உள்ள நிலையில் 3-வதாக முன்னாள் அமைச்சரான கே.சி.வீரமணி வீட்டில் லஞ்ச ஒழிப்பு சோதனை நடைபெற்று வருகிறது. இது அ.தி.மு.க. மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் மீது தொடர்ச்சியாக லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்குப்பதிவு செய்து சோதனை நடத்தி வருவது அரசியல் அரங்கிலும் பரபரப்பான பேச்சாக மாறி உள்ளது. லஞ்ச ஒழிப்பு போலீசாரின் இந்த தொடர் நடவடிக்கை அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

எம்.ஆர்.விஜயபாஸ்கர், எஸ்.பி.வேலுமணி, கே.சி.வீரமணி ஆகியோரது வீடுகளை தொடர்ந்து மேலும் சில முன்னாள் அமைச்சர்களின் வீடுகளிலும் விரைவில் சோதனை நடத்தப்பட வாய்ப்பு இருப்பதாக லஞ்ச ஒழிப்பு போலீஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



சென்னை, செப்டம்பர் 17 2021: தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி காட்சி வாயிலாக இந்து சமய அறநிலையத்துறை சார்பில் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மீன்வள துறை அமைச்சர் அனிதா ஆர் ராதாகிருஷ்ணன் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பால்வளத்துறை அமைச்சர் சா.மு. நாசர், சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமைச் செயலாளர் சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திருச்சிராப்பள்ளி தூத்துக்குடி திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திண்டுக்கல் - மதுரை வருவாய் கோட்டங்களில் மலைவேடன் பழங்குடியின மக்களுக்கு இனச்சான்றிதழ் வழங்கிடுக! தலைமைச் செயலாளருக்கு - சிபிஐ (எம்) கடிதம்!!

திண்டுக்கல், செப்டம்பர் 17 2021: திண்டுக்கல், மதுரை வருவாய் கோட்டங்களில் கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக மலைவேடன் பழங்குடியின மக்களுக்கு இனச்சான்று வழங்கிட அதிகாரிகள் மறுத்து வருகின்றனர். இம்மக்களுக்கு உடனடியாக இனச்சான்றிதழ் வழங்கிட வேண்டுமென வலியுறுத்தி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் கே. பாலகிருஷ்ணன் நேற்று (15.9.2021) தலைமைச் செயலாளருக்கு எழுதியுள்ள கடிதம் கீழே தரப்பட்டுள்ளது.

திண்டுக்கல் வருவாய் கோட்டத்தில் கடந்த 25 ஆண்டுகளாக மலைவேடன் பழங்குடியின மக்களுக்கு இனச்சான்றிதழ் வழங்க மறுப்பது மற்றும் மதுரை மாவட்டத்தில் வாழும் மலைவேடன் பழங்குடியின மக்களுக்கு இனச்சான்றிதழ் வழங்க கோரிய மனுக்கள் ஆண்டுக்கணக்கில் நிலுவையில் உள்ளதை தாங்கள் துரிதப்படுத்தி இனச்சான்றிதழ் வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டுவது தொடர்பாக :

1. மலைவேடன் என்கிற சாதி (பழங்குடியினர் இனம்) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் சிறப்பு சட்டம், (Scheduled Castes and Scheduled Tribes order (Amendment) Act, 1976 (No. 108 of 1976) இந்திய பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு 27.07.1977 முதல் மாண்புமிகு இந்திய ஜனாதிபதியின் அறிவிக்கை மூலமாக தமிழ்நாடு முழுவதும் மலைவேடன் இனம் வசிப்பதாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. "Malaivedan Community has been specified as Scheduled Tribes throughout the Tamil Nadu State". தமிழகத்தில் அரசிதழ் எண் : 1773, தேதி : 23.06.1984-ல் வரிசை எண்.22-ல் மலைவேடன் பழங்குடியினர் இனம் வசிப்பதாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

2. ஒன்றுபட்ட மதுரை மாவட்டமாக இருந்த காலத்தில் மதுரை மாவட்டத்திற்கு உட்பட்ட திண்டுக்கல் மற்றும் பழனி வருவாய் கோட்டங்களில் வசித்து வந்த மலைவேடன் இன பழங்குடியின மக்களுக்கு இனச்சான்று வழங்கி வந்துள்ளனர். கடந்த 1984-ம் ஆண்டு திண்டுக்கல் மாவட்டம் பிரிக்கப்பட்ட பிறகு, 1989-ம் வருடத்திற்கு முன்னர் வட்டாட்சியர் அவர்களாலும், 1989-ம் ஆண்டிற்கு பிறகு வருவாய் கோட்டாட்சியர் அவர்களாலும் மலைவேடன் (எஸ்டி) இனச்சான்று வழங்கப்பட்டு வந்தன. திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள பழனி வருவாய் கோட்டத்தில் வசிக்கும் மலைவேடன் பழங்குடியின மக்களுக்கு இனச்சான்றிதழ் இன்றைக்கும் வழங்கப்பட்டு வருகிறது என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். 1992-க்குப் பிறகு சுமார் 25 ஆண்டு காலமாகவே திண்டுக்கல் வருவாய் கோட்டத்தில் வசிக்கும் மலைவேடன் பழங்குடியின மக்களுக்கு இனச்சான்று வழங்கிட மறுத்து வருகின்றனர். கடந்த 25 ஆண்டுகளாக மலைவேடன் இனச்சான்று வழங்க மறுத்ததுடன் அரசியல் சாசனம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளான கல்வி, வேலைவாய்ப்பு, ஒரு தலைமுறையினருக்கே மறுக்கப்பட்டுள்ளது. திண்டுக்கல் வருவாய் கோட்டத்தில் மட்டுமே இத்தகைய மோசமான நடவடிக்கை தொடர்கிறது.

3. மதுரை வருவாய் கோட்டத்தில் துவரிமான், கோட்டைமேடு, மண்ணாடிமங்கலம், கட்டக்குளம், அச்சம்பத்து, விராட்டிபத்து, அலங்காநல்லூர், வெளிச்சநத்தம் உட்பட சுமார் 11 கிராமங்களில் 8000 மலைவேடன் இன மக்களும், திருமங்கலம் வருவாய் கோட்டத்தில், மாடக்குளம், அவனியாபுரம் மற்றும் வேடர்புளியன்குளம் ஆகிய கிராமங்களில் சுமார் 2000 மக்களும் வசித்து வருகிறார்கள். இம்மக்களுக்கு மலைவேடன் இனச்சான்றிதழ் வழங்குவதில் காலதாமதமும், சில கிராமங்களில் மலைவேடன் இனச்சான்றிதழ் கோரிய மனுக்கள் முறைப்படி விசாரிக்காமல் மற்றும் இவர்கள் கொடுத்த ஆவணங்கள் எதையும் பரிசீலிக்காமல் அம்மனுக்கள் தள்ளுபடி செய்துள்ளதாக அறிகிறேன்.

எனவே, மேற்குறிப்பிட்டுள்ள தகவல்களின் அடிப்படையில், ஏற்கனவே இனச்சான்று கோரி விண்ணப்பித்துள்ள திண்டுக்கல் வருவாய் கோட்டத்தில் வசிக்கும் மலைவேடன் இனமக்களுக்கு இனச்சான்று வழங்கிடவும், அதேபோல், மதுரை மாவட்டத்தில் மலைவேடன் பழங்குடியின மக்கள் வசிக்கும் கிராமங்களில் சிறப்பு முகாம் நடத்தி இனச்சான்றிதழ் வழங்கிட தாங்கள் ஆவன செய்து நடவடிக்கை எடுத்திட வேண்டுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

## விக்கிரவாண்டி ஒன்றியத்தில் உள்ளாட்சித் தேர்தல் ஓட்டு எண்ணும் மையத்தை கலெக்டர் ஆய்வு செய்தார்

விக்கிரவாண்டி, செப். 17 2021: விக்கிரவாண்டி ஒன்றியத்தில் உள்ளாட்சித் தேர்தல் ஓட்டு எண்ணும் மையத்தை கலெக்டர் ஆய்வு செய்தார்.

விக்கிரவாண்டி ஒன்றியத்திற்கு தேர்தல் ஓட்டு எண்ணிக்கை மையமாக முண்டியம்பாகத்தில் உள்ள தனியார் பள்ளி தேர்வு செய்யப்பட்டுள்ளது.

நேற்று மாலை 4.30 மணி அளவில் மாவட்ட கலெக்டர் மோகன் ஓட்டு எண்ணிக்கை மையத்தில் திடீர் ஆய்வு செய்து அடிப்படை வசதிகள் உள்ளதா எனவும், ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தையும் ஆய்வு செய்து அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியும், தொரவி கிராமத்தில் பதட்டமான ஓட்டு சாவடியையும் ஆய்வு செய்தார். மாவட்ட எஸ்.பி., ஸ்ரீ நாதா, துணை கலெக்டர் (பயிற்சி) ரூபினா, ஆர்.டி.ஓ., அரிதாஸ், ஊராட்சிகள் திட்ட இயக்குனர் சங்கர், உதவி இயக்குனர் ஜோதி, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் வெண்ணிலா, நேர்முக



உதவியாளர் சரவணன், தாசில்தார் தமிழ்ச்செல்வி, பி.டி.ஓ.,க்கள் நாராயணன், குலோத்துங்கன், சர்க்கரை ஆலை உதவித் தலைவர் ரமேஷ், வருவாய்த்துறை, ஊரக உள்ளாட்சி துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



மதுரை: மதுரை மாநகராட்சி ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் பல்லடுக்கு வாகன நிறுத்துமிடம் பணிகளை மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அனீஸ் சேகர் தலைமையில் மாநகராட்சி ஆணையாளர் கார்த்திகேயன் முன்னிலையில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் ஆய்வு செய்து பார்வையிட்டார்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



## உரக் குண்டான் கிராமத்தில் ஸ்ரீ காளியம்மன் திருக்கோவில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக பெருவிழா



**வருஷநாடு, செப்டம்பர் 17 2021: ஆண்டிபட்டி வட்டம் கடமலை மயிலை ஒன்றியம் தும்மக்குண்டு ஊராட்சிக்குட்பட்ட உரக் குண்டான் கிராமத்தில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் ஸ்ரீ காளியம்மன் திருக்கோவில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக பெருவிழா நடைபெற்றது. கும்பாபிஷேகத்தை தொடர்ந்து தீர்த்தம் வழங்குதல் அபிஷேக ஆராதனைகளும் அன்னதானமும் நடைபெற்றது. கும்பாபிஷேக விழாவிற்கு சுற்று வட்டார கிராம பொதுமக்கள் பெரும் திரளாக கலந்துகொண்டு காளி அம்மனை தரிசனம் செய்தனர் கும்பாபிஷேக விழா ஏற்பாட்டினை எம்.எஸ். மாடசாமி முனியாண்டி ஜெயபால் மாடசாமி சுரேஷ் ஜெயசித்ரா ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.**



**ஒட்டன்சத்திரம்: ஒட்டன்சத்திரம் அருகே உள்ள வேடசந்தூர் சாலை பைபாஸ் மேம்பாலம் புறவழிச்சாலையில் சுமார் 61 வயது மதிக்கத்தக்க அடையாளம் தெரியாத ஆண் சடலம் ஒட்டன்சத்திரம் போலீஸாரால் மீட்கப்பட்டுள்ளது, மேலும் இவர் குறித்து அடையாளம் தெரிந்த நபர்கள் உடனடியாக ஒட்டன்சத்திரம் காவல் நிலையத்திற்கு கீழ்கண்ட தொடர்பு எண்ணுக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**



**சென்னை: விக்ரம் தங்கை அனிதா மகன் பப்ஜி படபிடிப்பில் 4 வருடம் வளர்த்த முடியை ஒரு காட்சிக்காக வெட்டினார். முடியை கேன்சர் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளித்தார். பெண் வேடம் போட்டுள்ளார். விக்ரம் போல் தன் பயணத்தை தொடர்வது மகிழ்ச்சி.**

## கூட்டு குடிநீர் திட்ட பணிகள் கடமலை மயிலை ஒன்றியத்தில் தீவிரம்



**வருஷநாடு, செப்டம்பர் 17 2021: கடமலை மயிலை ஒன்றிய பகுதிகளில் உள்ள கிராமங்களுக்கு வைகை அணையிலிருந்து குடிநீர் சுத்திகரிக்கப்பட்டு கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்க உள்ளனர். அதனடிப்படையில் இன்று வருஷநாடு சிங்கராஜபுரம் சாலையில் ஜேசிபி இயந்திரம் மூலம் பைப்லைன் அமைக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதனால் எதிர்வரும் காலங்களில் குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்படாது. என்று தன்னார்வலர்களும் சமூக ஆர்வலர்களும் கூறுகின்றனர்.**



**தேனி: தேனி மாவட்டம் பெரியகுளம் வடுகபட்டி பேரூராட்சியில் அம்புஜம் ணிளி தலைமையில் கொரானா தடுப்பூசி பொதுமக்களுக்கு செலுத்தப்பட்டது .இந்நிகழ்வில் சுகாதார ஆய்வாளர் ரெங்கராஜ் மற்றும் சுகாதர பணியாளர்கள் ,தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர் .அனைவரும் முகக்கவசம் கிருமிநாசினி சமூக இடைவெளி கடைபிடிக்கப்பட்டது.**



**தேனி: தேனி மாவட்டம் பெரியகுளம் மேல்மங்கலத்தில் ஊராட்சித்தலைவர் நாகராஜன் அவர்களின் தீவிர முயற்சியால் கிராமத்திற்கு காய்கறி விற்பனை சந்தை வந்துள்ளது. இச்சந்தைக்கு செயலர் முருகன் முயற்சிக்கு சிறப்பாக காய்கறி விற்பனை நடைபெறுகிறது .வாடிக்கையாளர் காய்கறி வாங்கும்போது எடுத்தப்படம் .மக்களிடம் பெரும் வரவேற்பை பெற்றது.**

## குமரி மாவட்டத்தில் 11 பேருக்கு நல்லாசிரியர் விருது

*கன்னியாகுமரி, செப்டம்பர் 17 2021:* குமரி மாவட்டத்தை சேர்ந்த 11 ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருது வழங்கும் விழா நாகர்கோவிலில் உள்ள கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது. விழாவுக்கு கலெக்டர் அரவிந்த் தலைமை தாங்கினார். விஜய் வசந்த் எம்பி மற்றும் ராஜேஷ் குமார் எம்எல்ஏ மாவட்ட வருவாய் அதிகாரி சிவப்பிரியா முதன்மை கல்வி அதிகாரி புகழேந்தி நாகர்கோவில் கல்வி மாவட்ட அதிகாரி மோகனன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



விழாவில் நல்லாசிரியர் விருது பெற்ற மார்த்தாண்டம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி முதுகலை ஆசிரியர் விஜயன். நாகர்கோவில் புனித ஜோசப் கான்வென்ட் மேல்நிலைப்பள்ளி ஆசிரியை மஞ்சுளா கொல்லங்கோடு அரசு மேல்நிலைப் பள்ளி ஆசிரியை மீனாம்பிகா நட்டாலம் மேல்நிலைப்பள்ளி மதுரை சீனியர் கத்தோலிக்க ஒரு நிலைப் பள்ளி இடைநிலை ஆசிரியை புஷ்ப ஜெயந்தி. ஏழு தேசப்பற்று அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் தேவராஜ். செண்பகராமன்புதூர் அரசு மேல்நிலைப்பள்ளி முதுகலை ஆசிரியர் மலர்விழி. வடசேரி எஸ் எம் ஆர் வி தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் ராஜா. நாகர்கோவில் சிறுமலர் தொடக்கப்பள்ளி இடைநிலை ஆசிரியர் ரத்தின லேக்ஸ். கீழ்குளம் அரசு மேல்நிலைப்பள்ளி ஆசிரியை செலின் மேரி. இமாகுலேட் அழகியமண்டபம் சிஎஸ்ஐ பப்ளிக் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியை சந்திரகாந்தம். ஆகியோருக்கு விருந்தினை அமைச்சர் மனோ தங்கராஜ் வழங்கினார்.

கல்விக்கு அரசு முக்கியத்துவம்:- குமரி மாவட்டத்தில் நல்லாசிரியர் விருது பெற்றுள்ள ஆசிரியர்களை பாராட்டுகிறேன். நமது மாவட்டத்திற்கு பெருமை சேர்ப்பது கல்வி என்பதை நாம் மறக்க முடியாது. இந்தியாவில் பல மாநிலங்கள் வளர்ச்சி பெற்று உள்ளது நமது மாநிலம் வளர்ச்சி பெற்றுள்ளது. குஜராத் மாநிலம் பொருளாதாரத்தில் வளர்ச்சி அடைந்துள்ளது. கேரள மாநிலம் சமூகத்தில் வளர்ச்சி அடைந்துள்ளது ஆனால் தமிழகம் சமூகம் மற்றும் பொருளாதார வளர்ச்சியில் முதுமை பெற்றுள்ளது.

இளைஞர்களுக்கு தனித்திறமை:- தமிழக இளைஞர்களிடம் இல்லாத திறமைகள் இல்லை அந்த நிலையை வெளியே கொண்டுவர வேண்டும். அதற்கு முக்கிய காரணம் கல்வி என்பதை நாம் மறந்துவிட முடியாது. கல்வி வளர நாம் வளர்ச்சி அடைகிறோம் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் ஏழை எளிய மாணவ-மாணவிகளிடம் புகலிடமாக இருக்கிறது. சாமானியர் வீட்டு குழந்தைகள் தங்களது இலக்கை அடைவதற்கு உதவுவது அரசு பள்ளிதான் தமிழக அரசை பொறுத்தமட்டிலும் ஆசிரியர்களுக்கு எப்பொழுதும் துணை நிற்கும் என்று அமைச்சர் மனோ தங்கராஜ் அவர்கள் உறுதியளித்துள்ளார்.

DTP & DESIGN
All Online Services
8144337349

## மர்ஃபி ரிச்சர்ட்ஸ் புரூட் மிக்சர் கிரைண்டர் உடன் சேர்ந்து நடிகை அமலா பால் தனது விருப்பத்துக்குரிய தென்னிந்திய உணவு வகைகளை சமைக்கிறார்!

*சென்னை, செப்டம்பர் 17 2021:* எலெக்ட்ரிக்கல் வீட்டு உபயோக பொருள்களில் மிகவும் மதிப்பு வாய்ந்த பிராண்டான மர்ஃபி ரிச்சர்ட்ஸ், நடிகை அமலா பால் அவர்களுடன் இணைந்து தென்னிந்திய உணவு வகைகள் சமைப்பதற்கு மிகவும் பொருத்தமான வீட்டு உபயோகப் பொருளாக, கவர்ச்சிகரமான புரூட் மிக்சர் கிரைண்டர் உள்ளது என்பதை வெளிப்படுத்துகிறது. இந்த டிஜிட்டல் படத்தில், நடிகை அமலா பால் தனது வீட்டில் மிகுந்த சௌகரியத்துடன், தனக்கு விருப்பான உணவு வகைகளை மர்ஃபி ரிச்சர்ட்ஸ் தயாரிப்பான மிகவும் ஆற்றலும், அழகும் நிறைந்த புரூட் மிக்சர் கிரைண்டர் உதவியுடன் மகிழ்ச்சியாக செய்வதை காணலாம். இந்த தயாரிப்பானது 800 வாட்ஸ் தாமிர மோட்டார் உதவியுடன் அளவற்ற செயல்பாடுகள் மூலம் மிகவும் கடினமான பணிகளை மேற்கொண்டு, வாடிக்கையாளர்களுக்கு மிகவும் நம்பகமான உணவு வகைகளை தயாரிக்க உதவுகிறது. சந்தையில் கிடைக்கும் மற்ற தயாரிப்புகளிலிருந்து மாறுபட்டு தனித்தன்மையுடன் மரத்தினால் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் இந்தியாவின் நவீன சமையலறைகளில் அவசியம் இடம் பெற வேண்டிய ஒன்றாக வடிவமைக்கப்பட்டுள்ளது.



இன்னும் சமூக இடைவெளியும், வீடுகளுக்கு உள்ளேயே இருக்க வேண்டிய நிலையும் தொடர்வதால், வீட்டில் கொண்டாட்டத்துடன் சமையல் செய்ய விரும்பும் நடிகையின் ஏக்கத்தையும், மகிழ்ச்சிகரமான ஒரு விருந்து வழங்க விரும்புவதையும்- தோழிகளின் சமையல் குறிப்புகளுக்கும், புரூட் மிக்சர் கிரைண்டருக்கும் நன்றி கூறுவதையும் அப்படம் சித்தரிக்கிறது. அதன் பல்திறன் செயல்பாடுகளையும், லட்சிய நிலைத்தன்மையுடன் உணவுப் பொருள்களை அரைக்கவும், பல்வேறு வகையான தென்னிந்திய உணவு பண்டங்களை தயாரிப்பதற்கான மிக பொருத்தமான துணையாக விளங்குவதையும் அவர் வலியுறுத்துகிறார்.

இந்த கூட்டு செயல்பாடு குறித்து மர்ஃபி ரிச்சர்ட்ஸ் நிறுவனத்தின் தேசிய சந்தைப் பிரிவு தலைவர் சந்தியா பிஸ்வாஸ் கூறுகையில், "மர்ஃபி ரிச்சர்ட்ஸ் புரூட் மிக்சர் கிரைண்டர்ஸ்-ஐ காட்சிப்படுத்துவதில் மிகச் சிறந்த மகிழ்ச்சியை அது எங்களுக்கு அளிக்கிறது. அதன் அழகிய வடிவமைப்பு, சிறப்பான செயல்பாடுடன், வசதி, ஆற்றல், நேர்த்தி ஆகிய அனைத்தையும் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு நாங்கள் ஒரே சமயத்தில் வழங்குகிறோம். நேர்த்தியான, அழுத்தமான கதாபாத்திரங்களை ஏற்று நடிப்பவர் என அறியப்பட்ட நடிகை அமலா பால், எங்களது பிராண்டை முன்மொழிவதற்கு மிகவும் பொருத்தமானவர் ஆவார். எப்போதும் தகுதி மற்றும் சொகுசு ஆகியவற்றில் தீவிர ஆர்வம் காட்டும் மக்களை கொண்ட தென்னிந்திய சந்தையில் இந்த தனித்துவமான தயாரிப்பை அறிமுகப்படுத்த ஒரு சிறந்த கூட்டுச் செயல்பாட்டாளரை எங்களால் கண்டு பிடிக்க முடியவில்லை. இந்திய குடும்பங்களில் சந்தைகளின் பங்கு மற்றும் மனங்களின் பங்கு ஆகியவற்றை அதிகளவில் சேகரிக்க இந்த கூட்டுச் செயல்பாடு உதவும் என நாங்கள் உறுதியாக நம்புகிறோம்" என்றார்.

இந்த கூட்டு செயல்பாடு குறித்து நடிகை அமலா பால் கூறுகையில், மிக உயர்ந்த பிராண்டான மர்ஃபி ரிச்சர்ட்ஸ் உடன் இணைந்து செயல்படுவதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. நமது இந்திய சமையலறைகளின் தேவைகளை மிகச் சரியாக புரிந்து கொண்ட ஒரு சர்வதேசிய பாரம்பரிய பிராண்டாகும். பசியைத் தூண்டும் உணவை நான் விரும்புவதால், புரூட் மிக்சர் கிரைண்டரின் அழகிய வடிவமைப்பு மற்றும் நம்பகத்தன்மையை நான் மிகவும் ரசித்தேன். அதன் எல்லையற்ற வடிவமைப்பு, பன்முக செயல்பாடு, வலுவான காப்பர் பிளேடுகள் கொண்ட இது, ஒவ்வொரு தென்னிந்திய சமையலறைகளிலும் அவசியம் இருக்க வேண்டிய ஒன்றாகும்" என்றார்.

மேலும் பாரம்பரிய உணவை ருசிக்கும் வாடிக்கையாளர்களுக்கு திருப்தி அளிக்கும் வகையில் மிகவும் பரந்துபட்ட அளவிலான மிக்சர் கிரைண்டரை மர்ஃபி ரிச்சர்ட்ஸ் வடிவமைத்து கொடுத்துள்ளது. இந்திய மசாலாக்களின் சுவைகளையும் வகைமைகளையும் மீண்டும் உருவாக்க வேண்டும், உணவு பண்டங்களின் செய்முறையில் அசலான சுவையை மீண்டும் கொண்டு வர வேண்டும் என்ற ஆர்வம் தற்போது வாடிக்கையாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது. அந்த வரிசையில் புதிய ஒன்றாக புரூட் இணைக்கப்பட்டுள்ளது. வலுவான மூடிகள், இலகுவான செயல்பாடு, தாமிர மோட்டார், நீண்டு உழைக்கும் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பிளேடுகள் ஆகியவற்றுடன் மிக்ஸர்கள் வருகின்றன. வலுவான அடித்தளம் மற்றும் உறுதியான பூட்டுடன் கூடிய மூடி ஆகியவற்றின் காரணமாக அரைக்கும் நேரத்திலும் வாடிக்கையாளர்கள் பல்வேறு பணிகளில் ஈடுபட இயலும். இதன் பல்வேறுபட்ட ரகங்களை நேரடியாக கடைகளிலும் ஆன்லைன் ஸ்டோர்களிலும் வாங்கிக் கொள்ள இயலும். மேலும் இதன் இ-காமர்ஸ் தளமான https://www.morphyrichardsindia.com என்ற தளத்தின் மூலமாகவும் வாங்கலாம்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



## எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ்-2 தேர்ச்சி பெற்ற மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிகளின் மூலமாக வேலை வாய்ப்பு பதிவு செய்து அடையாள அட்டை பெறலாம்

சென்னை, செப். 17 2021: எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் பிளஸ்-2 தேர்ச்சி பெற்ற மாணவர்கள் தங்கள் கல்வித்தகுதியை தாங்கள் பயின்ற பள்ளிகளின் மூலமாக வேலை வாய்ப்பு துறையின் இணையதளமான https://tnvelaivaaippu.gov.in-ல் பதிவு செய்து அடையாள அட்டை பெற தமிழக அரசால் உரிய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2021-ம் ஆண்டுக்கான பிளஸ்–2 தேர்ச்சி பெற்ற மாணவர்களின் மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்பட உள்ளதையடுத்து 17ந் தேதி முதல் அக்டோபர் 1ந் தேதி வரை 15 நாட்களுக்கு ஒரே பதிவு மூப்பு தேதி வழங்கி, அவர்கள் பயின்ற பள்ளியிலேயே இணையதளம் வாயிலாக வேலைவாய்ப்பு அலுவலக பதிவுப்பணி நடைபெற சிறப்பு நடவடிக்கைகளை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, பள்ளி கல்வித்துறையுடன் இணைந்து மேற்கொண்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளிகள், மெட்ரிக் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளிலும் இவ்வசதியினை பயன்படுத்தி மாணவர்கள் வேலைவாய்ப்பு பதிவுகள் மேற்கொள்ளலாம்.

மேலும் சி.பி.எஸ்.இ பாடத்திட்டத்தில் பயின்ற மாணவர்கள் தங்கள் கல்வித் தகுதியை வேலைவாய்ப்புத் துறையின் இணையதளத்தில் https://tnvelaivaaippu.gov.in தங்கள் அளவிலேயே ஆன்லைனில் பதிவு செய்யலாம் என தெரிவிக்கப்படுகிறது.

பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்று புதிதாக பதிவு செய்ய விரும்பும் மாணவர்கள் ஆதார் அட்டை, குடும்ப அட்டை, சாதி சான்றிதழ் ஆகிய விவரங்களுடன் சம்பந்தப்பட்ட பள்ளிகளை அணுகி பதிவுகள் மேற்கொள்ளலாம்.

இந்த தகவல் வேலைவாய்ப்பு மற்றும் பதிவுத்துறை இயக்குநர் கொ.வீரராகவராவ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.





**மதுரை:** மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் மேல நாடு தெற்கு தெரு கிராமம் மீனாட்சிபுரத்தில் அமைந்திருக்கும் முதல் கரை பெரிய மணப் பட்டி யார் நல்ல புலியன் மலை புலியன் வகையாவிற்கு பாத்தியப்பட்ட அருள்மிகு புலியடி அய்யனார் திருக்கோவில் குடமுழுக்கு மற்றும் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் வெகு விமர்ச்சியாக நடைபெற்றது. இதில் மாங்குளம் மற்றும் தெற்குத்தெரு ஊர் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். இந்நிகழ்ச்சியில் ஆயிரத்துக்கும் மேற்ப்பட்டவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.



**சென்னை:** தமிழ் திரைப்பட நடப்பு விநியோகஸ்தர்கள் சங்கத் தலைவர் அருள்பதி, பொது செயலாளர் ராஜமன்னார் ஆகியோரிடம், தமிழ் திரைப்பட நடப்பு தயாரிப்பாளர்கள் சங்கத்தின் பொருளாளர் தியாகராஜன், பொது செயலாளர் டி சிவா, துணைத்தலைவர் எஸ்ஆர் பிரபு, துணைத்தலைவர் தனஞ்செயன், இணை செயலாளர் சுரேஷ் காமாட்சி ஆகியோர் நினைவுப் பரிசை வழங்கி வாழ்த்தியபோது எடுத்த படம்.




**கிருஷ்ணகிரி:** கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் சந்தோஷ் தியேட்டர் அருகில் சதாம் உசேன் என்பவர் மெத்தை தயாரிக்கும் தொழிற்சாலை நடத்தி வருகிறார். இந்த நிலையில் தொழிற்சாலையில் உள்ள பஞ்சில் திடீரென்று தீப்பிடித்து எரிந்தது தகவலறிந்த கிருஷ்ணகிரி தீயணைப்புத் துறையினர் விரைந்து வந்து தீயை அணைத்தனர் இதில் ஒரு மோட்டார் சைக்கிள் எரிந்து நாசமானது. இது குறித்து காவேரிப்பட்டணம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்துகின்றனர்.

## பெரியகுளம் அருகே குள்ளப்புரத்தில் பூமி பூஜை துவக்க விழா



தேனி, செப்டம்பர் 17 2021: தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே குள்ளப்புரத்தில் ஊராட்சித்தலைவர் மஞ்சுளா தேவி செந்தில்குமார் தலைமையில் முன்னிலை சேதுகுமார் பிடிஓ ,தேனி ஆடிட்டர் மகேந்திரன் ,தலைமையாசிரியர் ராஜவேலு மற்றும் வார்டு உறுப்பினர்கள் ,ஊரட்சித்தலைவர்களும் தேனி மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் ராஜபாண்டி சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர் .சுகாதார பணியாளர்கள் தூய்மை பணியினையும் சுகாதார பணியினையும் வருவாய் ஆய்வாளர் களும் ஊராட்சி செயலாளர்களும் வருகைபுரிந்த அனைவர்க்கும் முகக்கவசம் சமூக இடைவெளி கிருமிநாசினி அரசு வழிகாட்டுதலின்படி பின்பற்றப்பட்டது .முக்கியபிரமுகர்களுக்கு சால்வை அணிவித்து கௌரவிக்கப்பட்டது . இச்சிறப்பு ஏற்பாட்டினை செயலாளர் பாஸ்கர் சிறப்பாக செய்திருந்தார் .முக்கியபிரமுகர்களுக்கு மத்திய உணவு வழங்கப்பட்டது.

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

## பாலூத்து ஊராட்சியில் வேர்ல்டு விஷன் சார்பாக ஊட்டச்சத்து வழங்கும் நிகழ்ச்சி



வருஷநாடு, செப்டம்பர் 17 2021: கடமலை மயிலை ஒன்றியம் பாலூத்து ஊராட்சியில் வேர்ல்டு விஷன் இந்தியா சார்பாக மயிலாடும்பாறை ஏடிபி இன் மூலம் ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகளை கண்டறிந்து உடல் எடை அதிகரிக்க தேவையான சத்தான பொருட்களை குழந்தைகளுக்கு வேர்ல்டு விஷன் இந்திய வழங்கி வந்தது. தலா ஒரு குழந்தைகளுக்கு ரூபாய் 2500 மதிப்பிலான பொருட்களை பத்துக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் துணைத் தலைவர் மற்றும் கிராம பொதுமக்கள் முன்னிலையில் வழங்கப்பட்டது. இவ்விழாவில் திட்ட மேலாளர் ஜேசு வரன் தங்கராஜ் தலைமையில் நடைபெற்றது. இதில் திட்ட ஒருங்கிணைப்பாளர் யோவான் குழந்தைகளை நன்றாக வளர்ப்பது பற்றி எடுத்துரைத்தார். இதில் பாலுத்து ஊராட்சி எப் ஓ ஜெகதீஸ் வரவேற்புரையாற்றினார். அன்பரசன் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து பற்றி விழிப்புணர்வு இப்பகுதி மக்களுக்கு வழங்கினார். கூட்டத்தில் கலந்துகொண்ட பயனாளிகள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் வேர்ல்டு விஷன் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

## குடிநீர் தேவைக்கு இடம் தானமாக வழங்கியவருக்கு சிங்கராஜபுரம் ஊராட்சி சார்பாக வாழ்த்துக்கள்



வருஷநாடு, செப்டம்பர் 17 2021: சிங்கராஜபுரம் ஊராட்சிக்குட்பட்ட சிங்கராஜபுரம் கிராமத்தில் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் மூலம் வைகை அணையிலிருந்து சிங்கராஜபுரம் ஊராட்சிக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் கொண்டு வரும் பணி இனிதே தொடங்கியது. இதற்காக 25,000 லிட்டர் மற்றும் 30,000 லிட்டர் இரண்டு தரைமட்ட தொட்டி கட்ட தனது சொந்த நிலத்தில் 4 சென்ட் இடம் தானமாக வழங்கிய தங்கவேல் த/பெ. அய்யாவு நாயக்கர் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஊராட்சி சார்பாகவும் ஊர் மக்கள் சார்பாகவும் ஊராட்சி மன்ற தலைவர் மனமார்ந்த நன்றியினை நாகராஜ் வழங்கினார்.

## விக்கிரவாண்டி நகர தி.மு.க., சார்பில் அண்ணா பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது



விக்கிரவாண்டி, செப்.17 2021: விக்கிரவாண்டி நகர தி.மு.க., சார்பில் அண்ணா பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. விக்கிரவாண்டி நகர தி.மு.க., செயலாளர் நைனாமுகமது தலைமையில் கட்சியினர் ஊர்வலமாக சென்று வடக்கு பைபாஸ் முனையிலுள்ள அண்ணா சிலைக்கு மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் செல்வகுமார் மாலை அணிவித்து இனிப்பு வழங்கி கொண்டாடினர்.

முன்னாள் சேர்மன் அப்துல் சலாம், மலர்மன்னன், முன்னாள் துணை சேர்மன் சர்க்கார் பாபு, மாவட்ட துணை அமைப்பாளர்கள் பாபு ஜீவானந்தம், பாலாஜி, திலகர் , நகர தலைவர் தண்டபாணி, முன்னாள் கவுன்சிலர்கள் சுகுமார், பாலு, கோவிந்தசாமி, தேவராஜ், மாணவரணி யுவராஜ், சபிபுல்லா, இளைஞரணி கார்த்திக், பிரசாந்த், சிவா, அசோக்குமார், செல்வகுமார் மற்றும் நகர கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## சென்னை கால்நடை மருத்துவ கல்லூரியில் 13 மாணவர்களுக்கு கொரோனா

சென்னை, செப். 17 2021: வேப்பேரியில் உள்ள கால்நடை மருத்துவ கல்லூரியில் 13 மாணவர்களுக்கு கொரோனா உறுதியாகியுள்ளது.

தமிழ்நாட்டில் கடந்த செப்டம்பர் 1 ந் தேதி பள்ளி, கல்லூரிகள் திறக்கப்பட்டன. மாணவர்கள் அதிகளவில் கூடுவதை தவிர்க்கும் பொருட்டு சுழற்சி முறையில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. கொரோனா தடுப்பு நடவடிக்கைகளான மாஸ்க் அணிதல், சமூக இடைவெளியை பின்பற்றுதல் உள்ளிட்டவை கடுமையாக பின்பற்றப்படுகின்றன. எனினும், சில மாணவர்களுக்கு கொரோனா உறுதியாகிறது.

13 பேருக்கு பாதிப்பு இந்த நிலையில், சென்னை வேப்பேரியில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் 13 பேருக்கு கொரோனா உறுதியாகியுள்ளது. மாணவர்கள் அனைவருமே விடுதியில் தங்கிப் படித்த மாணவர்கள் என்றும் அண்மையில் சொந்த ஊர் சென்று திரும்பிய மூன்றாம் ஆண்டு மாணவர்கள் என்றும் கல்லூரி நிர்வாகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தொடர்பில் இருந்த மாணவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கும் பரிசோதனை செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

ஏற்கனவே, கோவையில் உள்ள தனியார் நர்சிங் கல்லூரி மாணவர்கள் 46 மாணவர்களுக்கு கொரோனா உறுதியாகியுள்ளது. அந்த கல்லூரியில் கேரளாவில் இருந்து வந்து தங்கிப்படிக்கும் 4 மாணவர்களுக்கு கொரோனா உறுதியானதைத் தொடர்ந்து மற்ற மாணவர்களுக்கும் பரிசோதனை செய்யப்பட்டதில் 46 மாணவர்கள் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## கன்னியாகுமரி பேரூராட்சியின் மூலம் சுற்றுலா வாகனங்களுக்கு மீண்டும் நுழைவு கட்டணம் வசூல்



கன்னியாகுமரி, செப்டம்பர் 17 2021: கன்னியாகுமரி மாவட்டம் முக்கடல் சங்கமிக்கும் குமரியில் சுற்றுலா வாகனங்களுக்கு நுழைவு கட்டணம் வசூல் செய்யப்பட்டது. சுற்றுலா தளமான கன்னியாகுமரிக்கு தினமும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். ஆண்டு முழுவதும் சுற்றுலாப் பயணிகள் வந்து சென்றாலும் நவம்பர். டிசம்பர். ஜனவரி. ஆகிய மூன்று மாதங்கள் சுற்றுலா பயணிகள் மட்டுமின்றி சபரிமலை செல்லும் ஐயப்ப பக்தர்கள் வருகையும் அதிகரித்திருக்கும் ஆகையால் மூன்று மாதங்களும் ஐயப்ப பக்தர்கள் சீசன் என்று கருதப்படும். இங்கு சுற்றுலா வரும் வாகனங்களுக்கு கன்னியாகுமரி சிறப்பு நிலை பேரூராட்சி மூலம் நுழைவு கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. அதன்படி பஸ் கார் வேன் உள்ளிட்டவைகளுக்கு வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் ஊரடங்கு காரணமாக ஏப்ரல் மாதம் முதல் தமிழக சுற்றுலாத் தலங்கள் மூடப்பட்டன. இதனால் கன்னியாகுமரிக்கு சுற்றுலா வாகனங்கள் அடியோடு நின்று போனது இந்தநிலையில் ஊரடங்கு தளர்வுகள் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து கன்னியாகுமரிக்கு சுற்றுலா பயணிகள் வர்ற அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனை தொடர்ந்து அங்கு சுற்றுலாப் பயணிகள் வருகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

வசூலிக்கும் முறைகள்:- சுற்றுலா வாகனங்கள் பஸ் 100. வேன் 70. கார் 50. வசூலிக்கப்பட்டு வருகிறது. கன்னியாகுமரி பேரூராட்சியின் மூலம் கன்னியாகுமரி வரும் சுற்றுலா வாகனங்களுக்கு நுழைவு கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

## ஸ்ரீராம் சிட்டி நிறுவனத்திலிருந்து உடனடி இரு சக்கர வாகனக் கடனை டிஜிட்டல் முறையில் பெறுவது எப்படி?

சென்னை, செப்டம்பர் 17 2021: ஸ்ரீராம் சிட்டியின் எக்ஸ்பிரஸ் இரு சக்கர வாகனக்கடன் என்றால் என்ன?

ஸ்ரீராம் சிட்டி, தனது அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் சௌகரியமான, எந்தவித தொந்தரவில்லாத மற்றும் காகிதமில்லா இரு சக்கர வாகனக் கடனை வழங்குகிறது. டிஜிட்டல் முறையில் வழங்கப்படும் இந்த வாகனக்கடன், அந்நிறுவனத்தின் மொபைல் அப்ளிகேஷன் மற்றும் இணையதளத்தில் 24ஜ்7 கிடைக்கும்.

எளிய முறையில் கடனை எவ்வாறு பெறுவது?

படி 1: ஸ்ரீராம் சிட்டி யூனியன் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் இணையதளத்தில் உள்நுழைக அல்லது மொபைல் அப்ளிகேஷனை பதிவிறக்கம் செய்க. இருசக்கர வாகனக் கடன் என்பதை தேர்வு செய்யவும் விண்ணப்பிக்கவும்.

படி 2: பெயர், தொடர்புக் கொள்ள அவசியமான தகவல்கள், மின்னஞ்சல் போன்ற விவரங்களை வழங்கவும் கீழ்தோன்றும் தேர்வுப்பட்டியலில் இருந்து நீங்கள் விரும்பும் வாகனத்தைத் தேர்ந்தெடுக்கவும்

படி 3: அவசியமான நிதி விவரங்களை வழங்கவும் தேவையான ஆவணங்களை பதிவேற்றவும் (வங்கி அறிக்கை, அடையாளச் சான்று மற்றும் முகவரி சான்று)

படி 4: திரையில் ஒரு ஆன்லைன் வவுச்சர் உங்களுக்கு வழங்கப்படும். இப்போது உங்கள் விருப்பத்திற்குரிய இருசக்கர வாகனத்தின் விநியோகத்திற்கான வவுச்சருடன் டீலரை சந்திக்கவும்.

கடனுதவி பெறுவதற்கு தேவையான ஆவணங்கள் எவை?

ஆதார் அட்டை

அடையாள சான்று - பாஸ்போர்ட் / ஓட்டுநர் உரிமம் / வாக்காளர் அடையாள அட்டை / பான் கார்ட் ( இவற்றில் ஏதேனும் ஒன்று)

முகவரி சான்று - பாஸ்போர்ட் / ஓட்டுநர் உரிமம் / கேஸ் புத்தகத்துடன் கேஸ் கட்டண ரசீது (இவற்றில் ஏதேனும் ஒன்று)

இதர தேவைகள் -

சமீபத்திய பாஸ்போர்ட் அளவு வண்ண புகைப்படங்கள்

வருமான ஆதார ஆவணங்கள்

கடந்த 3 மாதங்களுக்கான வங்கி அறிக்கை

கடனுதவி பெறுவதற்கான தகுதி குறித்த விவரங்கள்:

வயது

விண்ணப்பதாரர் 21 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்

கடனுதவி முதிர்வு காலத்தில் அதிகபட்ச வயது 59 ஆண்டுகளாக இருக்க வேண்டியது அவசியம்.

தொழில்

ஊதியம் பெறுபவர்கள் மற்றும் சுயதொழில் செய்யும் தனிநபர்கள் கடனுதவிப் பெற தகுதியானவர்கள்

பணி அனுபவம்

மாத ஊதியம் பெறும் விண்ணப்பதாரருக்கு, குறைந்தபட்ச பணி அனுபவம் ஒரு வருடமாவது இருக்கவேண்டும். மேலும் குறைந்தபட்ச மாதச் சம்பளம் ரூ. 12,000 இருக்கவேண்டியது அவசியம்.

சுயதொழில் செய்யும் விண்ணப்பதாரர் இரண்டு வருடங்களுக்கு ஒரே தொழிலை மேற்கொண்டிருப்பது அவசியம்.

முகவரி

விண்ணப்பதாரர் அளிக்கும் முகவரியில் அவர் குறைந்தப்பட்சம் ஒரு வருடமாவது வசித்திருக்க வேண்டும்

வங்கிக் கணக்கு செயல்பாடுகள்

விண்ணப்பதாரரின் வங்கிக் கணக்கு செயல்பாடுகளில் கடந்த 12 மாதங்களில் ஒரு முறை கூட பவுன்ஸ்ட் செக் பிரச்னை இருக்கக்கூடாது. சிறப்பு அம்சங்கள் மற்றும் பலன்கள்:

இரு சக்கர வாகனங்களின் ஆன் - ரோட் விலையில் 100 சதவீதம் வரை வாகனக் கடனுதவி வழங்கப்படுகிறது.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் அடிப்படையிலான டிஜிட்டல் தளம் [கிமி-மீஸீணீதீறீமீபீ பீ வீ ரீ வீ மீ ணீ றீ ஜீறீணீமீயீஷீக்ஷீனீ] இரு சக்கர வாகனக் கடனைப் பெறுவதற்கான ஒரு சுமூகமான மற்றும் எளிமையான செயல்முறையை உறுதி செய்கிறது.

ஸ்ரீராம் சிட்டி நிறுவனம், இந்தியாவில் மிக வேகமான இரு சக்கர வாகனக் கடனை வழங்கும் நோக்கத்தில், கடனுதவிக்கான விண்ணப்பம் ஒப்புதல் பெற்ற 24 மணி நேரத்தில் கடன் தொகை வழங்கப்படுகிறது.

கடன் விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டவுடன், பரிவர்த்தனை விவரங்கள் அனைத்தும் ஸ்ரீராம் சிட்டியின் வாடிக்கையாளர் இணையப் பகுதி / ஸ்ரீராம் சிட்டி செயலியில் கிடைக்கும். ஒரு முழுமையான வெளிப்படைத்தன்மையுள்ள செயல்பாட்டினை இது உறுதி செய்கிறது..

கடன்தொகை:

வாடிக்கையாளர்கள் தாங்கள் தேர்ந்தெடுக்கும் வாகனத்தின் வகையைப் பொறுத்து, ஆன் - ரோட் விலையில் 100% வரை இந்த கடனைப் பெறலாம். ரூ .1.75 லட்சம் வரை கடனுதவி வழங்கப்படுகிறது.

தவணைக்காலம் மற்றும் வட்டி விகிதம்:

வாடிக்கையாளர்கள் 11.5% -லிருந்து தொடங்கும் வட்டி விகிதத்தில் 36 மாதங்கள் / 3 வருடங்கள் என்ற தவணைக்காலத்தில் கடனை திருப்பிச் செலுத்த முடியும்.

Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# HELLO Mirror MADRAS

hellomadrasdaily@gmail.com
R.DIS No: 60/2021
Daily Morning Newspaper
The Truth

KARUNAII TRUST
அன்னை சிறப்புப் பள்ளி
Contact : 98413 59935

VOLUME - 1 | CHENNAI | DAILY | 4 Pages | Friday, September 17, 2021 | Rs.2/- | ISSUE - 65

## Union Minister Sarbanand Sonowal to inaugurate the BUMS course of first-ever Government Unani Medical College & Hospital in Jammu & Kashmir




New Delhi, September 17 2021: The Union Territory of Jammu & Kashmir is all set to welcome its first-ever Government Unani Medical College & Hospital at Nawab Bagh of Ganderbal district. Union Minister of Ayush and Ports, Shipping & Waterways, Sarbananda Sonowal will be inaugurating the BUMS (Bachelor of Unani Medicine & Surgery) course of the College on 17 September 2021. This will be his first visit to J&K after taking the charge of the Ministry. The event will also be graced by Shri Manoj Sinha, Lieutenant Governor.

The Ministry of Ayush has provided financial assistance to the tune of Rs.17.00 crore out of the estimated cost of Rs. 32.50 Crore for the establishment of the Unani Medical College & Hospital in Kashmir under Centrally Sponsored Scheme (CSS). This step was taken to promote the indigenous systems of medicine in the UT of J&K particularly the Unani System of Medicine in the Kashmir Division. The Hospital of the college is expected to provide services to around three lakh people of 136 villages and will also cater the population of adjoining districts of Srinagar, Baramulla and Bandipora.

Recognising the importance of alternative systems of medicine in the UT, the Ayush Ministry is determined to provide basic healthcare services to the people and improve their lifestyle-related disorders. The Unani System of Medicine is more popular in the Kashmir division while Ayurveda in Jammu Division and Homeopathy and Yoga & Naturopathy are common in both the divisions of the UT of J&K.

The College is having an annual intake capacity of 60 BUMS students along with 60 bedded hospital. There are 07 clinical departments viz; Moalijat (Medicine), Jarahat (Surgery), Ain-Uzn-Anf-Halq (Ophthalmology &ENT), Ilm-ul-Qabalatwa Niswan (Obstetrics & Gynecology), Ilmul Atfal (Paediatrics), Amraz-Jild (Dermatology) and Ilaj bit Tadbeer (Regimental Therapy) in the College.

## PM inaugurates the Defence Offices Complexes at Kasturba Gandhi Marg and Africa Avenue




New Delhi,, September 17 2021: Prime Minister Narendra Modi inaugurated the Defence Offices Complexes at Kasturba Gandhi Marg and Africa Avenue in New Delhi today. He also visited the Defence Office Complex at Africa Avenue and interacted with Army, Navy, Air Force and Civilian Officers.

Addressing the gathering, the Prime Minister said that in today's inauguration of complexes, India has taken another step in developing the nation's capital according to needs and aspirations of a new India in the 75th year of India's independence. He lamented the fact that for a very long time the defence related work was being conducted from hutments constructed during the second World War which were made keeping in mind horse stable and barracks needs. "This new defence office complex will strengthen the efforts of making the working of our defence forces convenient and effective", he said.

The Prime Minister said these modern offices built at KG Marg and Africa Avenue, will go a long way in effectively carrying out all the work related to the security of the nation. This is a big step towards the construction of a modern defense enclave in the capital. He appreciated the inclusion of attractive artefacts by Indian artists in the complexes as symbols of Aatm Nirbhar Bharat. "The complexes reflect the modern form of diversity of our culture while preserving the vitality of Delhi and environment", he said.

The Prime Minister remarked when we talk about the capital, it is not just a city. The capital of any country is a symbol of the thinking, determination, strength and culture of that country. India is the mother of democracy. Therefore, the capital of India should be such, in which there are citizens, people in the center.

The Prime Minister stressed the role of modern infrastructure in the government's focus on ease of living and ease of doing business. "The ongoing construction work of Central Vista is going on with this thought only", said the Prime Minister. Enumerating the efforts of new constructions as per the aspirations of the capital, the Prime Minister said that many constructions like residences for people's representatives, Efforts to preserve Baba Saheb Ambedakar's memories,, many bhawans, memorials for our martyrs are enhancing the glory of the capital today.

The Prime Minister said the work of the Defense Office Complex which was to be completed in 24 months has been completed in a record time of just 12 months. That too when all the other challenges ranging from labor were to the fore in the circumstances created by Corona. Hundreds of workers got employment in this project during the Corona period. The Prime Minister credited this to a new thinking and approach in the government's functioning. " When policies and intentions are clear, will power is strong and efforts honest, everything is possible", said the Prime Minister.

The Prime Minister said that these defence office complexes are the manifestation of changing work culture and priorities of the government. Optimal and proper use of available land with various departments of the government is one such priority, he said. Illustrating thi, the Prime Minister informed that these defence office complexes are constructed in 13 acre land parcels unlike earlier times when five times more land was used for similar complexes. The Prime Minister also highlighted that in next 25 years i.e. 'Azadi ka Amrit Kaal' productivity and efficiency of the government system will be supported by such efforts. Availability of a common central Secretariat, connected conference hall, easy connectivity like metro etc will help a great deal in making the capital people-friendly, the Prime Minister concluded.

## Tarang

## A fine collection of Tussar Silk sarees with a beautiful melange of ombre tones



Chennai, September 17 2021: Taneira presents Tarang, an exclusive range of handcrafted sarees with striking ombre designs and refreshing color tones. As the name suggests, the collection comprises statement sarees with many-hued waves meeting the fine weaves of Tussar making them classic ensembles, exuding sophistication and poise. Being widely acknowledged and cherished as a global fashion trend, ombre tones when integrated with the ever-so graceful saree make every celebration a memorable affair.

Tarang by Taneira incorporates pure, natural and soft fabric of Tussar that offers a rich coarse texture and makes for elegant comfort wear for a variety of occasions. Whether it's a brunch with friends or a work meeting, these sarees add a delicate charm to the wearer's personality. The base of sarees being Tussar, the design yarn has an array of viscose, noil and ghicha which offer their characteristic luster and sheen to the sarees. The threads offer a natural texture and an exceptionally sensational weaving. In various hues of green, pink, yellow, blue and many more, Tarang embodies different textures ranging from ombre, geometrical and striped patterns to fine-textured hues that makes it a versatile collection for the lovers of sarees and all things graceful.

Make every day special with Tarang, as each saree is finely woven in beautiful graceful tones to elevate the feeling of elegance. Available in a diverse range of sarees that fits for every occasion and season, Taneira presents modern day classics with Tarang, and extends some enchanting contemporary yet timeless pieces for today's evolving audience. The Tarang collection is priced at INR 10,000/- and is available across Taneira's stores in New Delhi, Bangalore, Mumbai, Hyderabad, Chennai & Pune and online at www.taneira.com.

## Tata Capital introduces Digital 'Loan Against Mutual Funds'

Chennai, September 17 2021: Tata Capital Ltd, the flagship financial services company of the Tata Group announces the launch of 'Loan Against Mutual Funds' (LAMF), an industry first end -to -end digital offering. Customers can avail quick and hassle free loans ranging from Rs 5 lacs and Rs 2 crores.

Tata Capital's digital loan offering is provided against a wide range of equity and debt schemes across mutual funds. Customers can avail the loan amount by marking a lien on the mutual fund units which are managed by various asset management companies. Backed by technology and analytics, LAMF is a personalized product to meet the diverse fund requirements of the customer. The loan amount is customized based on the value of the units in the mutual fund folio and tenure.

As reported by AMFI, the Indian Mutual Fund Industry's AUM has grown from 15.18 trillion as on July 31, 2016 to □35.32 trillion as on July 31, 2021, more than 2-fold increase in a span of 5 years. Given the exponential growth in this investment category, LAMF is best suited for customers to meet their personal or business funding requirements. Most importantly, the customer continues to hold the mutual funds portfolio and can enjoy its benefits as well. The customer does not require to redeem the portfolio and pays interest only on the applied loan amount.

The key benefits of Tata Capital's Digital LAMF are:

End- to - end online journey – onboarding to disbursement

Loan can be applied as an overdraft facility or as a term loan

Auto renewal facility available for tenure exceeding one year (subject to review of the mutual fund portfolio)

On boarding journey is completed within minutes

Online lien marking of Mutual Funds via CAMS API

Service portal comprises features for disbursement, drawdown, additional pledging and de-pledging. Online execution of documents. Customer enjoys the benefits of growth and dividend received from the MF portfolio. Speaking on the launch of LAMF, Abonty Banerjee, Chief Digital Officer, Tata Capital said, "Mutual funds as an investment category has shown tremendous growth over the last decade and continues to gain momentum. Our latest digital product gives customers an opportunity to easily meet their fund needs in a seamless manner, even while retaining control over their portfolio. This is in line with our strategy of constantly offering innovative products which offer customer convenience."

Customers applying for Loans Against Mutual Funds can simply log on to https://www.las.tatacapital.com/online/loans/las/apply-now-las-loan.

## Mahindra Launches the All New FURIO 7 range of LCV Trucks




Mumbai, September 17 2021: Mahindra's Truck and Bus Division (MTB), a part of the Mahindra Group, today announced the commercial launch of the new Mahindra FURIO 7, its latest, modern range of Light Commercial Vehicles (LCVs) with an unprecedented double guarantee of "More Mileage or Truck Back" and "Guaranteed Resale Value" after five years.


Mahindra Truck and Bus has extended its existing FURIO an Intermediate Commercial Vehicle brand launched in 2019 to an all-new Light Commercial Vehicle range, the Mahindra FURIO 7. This range will be available across three product platforms: 4-Tyre Cargo, 6-Tyre Cargo HD and 6-Tyre Tipper. The range will cover every application of business needs in Light Commercial Vehicle segments, delivering the FURIO brand promise of Higher Profitability along with Best-in-Class Mileage, Higher Payload and a Benchmark Cabin offering optimum comfort, convenience and safety. It also boasts of the Most Advanced Telematics technology: Mahindra iMAXX.

Mahindra FURIO 7 Light Commercial Vehicle range is part of the FURIO ILCV product range development, which is the culmination of focused efforts over the past six years of over 500 Mahindra engineers and 180 suppliers, and an investment of Rs. 650 crore. The introduction of the FURIO range follows MTB's launch of the BLAZO X range of Heavy Commercial Vehicles with the hugely successful and popular 'Mileage Guarantee', which subsequently helped BLAZO X establish itself as the most fuel-efficient truck in the HCV segment.

Speaking on the occasion, Veejay Nakra, Chief Executive Officer, Automotive Sector, Mahindra & Mahindra Limited, said, "The launch of the new FURIO 7 range of LCV trucks with an unprecedented customer value proposition of 'more mileage or return the truck and guaranteed resale value after five years', is a landmark in the industry. It will set new benchmarks of excellence and customer-centricity while reflecting our serious commitment to the segment and confidence in our products."

According to Jalaj Gupta, Business Head, Commercial Vehicles, Mahindra & Mahindra Limited, "Mahindra FURIO 7 range is designed around the unmet needs of LCV customers. Our customer insights for the category revealed that they are looking for a truck that can deliver higher earnings, lower Total Cost of Ownership (TCO), best warranty offer, lowest maintenance, safety and comfort all these leading to a risk-free business and complete peace of mind, all in one truck. Mahindra FURIO 7, with its unmatched package of customer value propositions and a very competitive initial price offer, is precisely that. We are confident enough to guarantee higher mileage or give the truck back as well as guaranteed resale value after five years that makes it a defining moment for the industry. This will help us in our objective of making our customers more prosperous."

## Low carbon bricks developed using construction and demolition waste for energy-efficient walling envelopes




New Delhi, September 17 2021: Researchers have developed a technology to produce energy-efficient walling materials using construction and demolition (C&D) waste and alkali-activated binders. These are called low-C bricks, do not require high-temperature firing, and avoid the use of high-energy materials such as Portland cement. The technology will also solve the disposal problems associated with C&D waste mitigation.

Conventionally, building envelopes consist of masonry walls built with burnt clay bricks, concrete blocks, hollow clay blocks, fly ash bricks, lightweight blocks, and so on. The envelopes spend energy during their production, thus incurring carbon emission (i.e., possess embodied carbon) consume mined raw material resources which lead to unsustainable constructions. The masonry units are manufactured either through the process of firing or using high-energy/embodied carbon binders such as Portland cement. As a result, the annual consumption of bricks and blocks in India is about 900 million tonnes. Besides, the construction industry generates vast amounts (70 – 100 million tonnes per annum) of construction and demolition waste (CDW). In order to promote sustainable construction, two important issues need to be addressed while manufacturing the masonry units – conserving mined raw material resources and emission reduction.

Moving towards this target, scientists of the Indian Institute of Science (IISc) developed a technology for producing alkali-activated bricks/blocks by utilising fly ash and furnace slag. The team of researchers developed low embodied carbon bricks from CDW waste through an alkali activation process using fly ash and ground slag and characterising the thermal, structural, and durability characteristics of Low-C bricks and their masonry. After ascertaining the Physico-chemical and compaction characteristics of the CDW, the optimum mix ratios of the materials were obtained, and then the production process was evolved to produce low-C bricks. Based on the optimum binder proportions, the compressed bricks were manufactured. The bricks were examined for engineering characteristics.

The major beneficiary of this development undertaken by IISc Bangalore with funding from the Department of Science and Technology with IISc technical help. The start-up unit will act as a technology dissemination unit through training, capacity building, and providing technical know-how for establishing such commercial units across India," remarked Prof. B V Venkatarama Reddy, IISc Bangalore.

Owned & Pubilshed by R.SATHYANARAYANAN from No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 26, and printed by him at chennai offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-2, Editor: R.SATHYANARAYANAN, Email: hellomadrasdaily@gmail.com. Contact: 8148231942. Subject to Chennai Court Jurisdiction